## புவிச்சரிதவியல், சுரங்கங்கள் பணியகம் - 2016

-------------------------------------------------------------------------------

புவிச்சரிதவியல், சுரங்கங்கள் பணியகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் கூற்றுக்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான புவிச்சரிதவியல், சுரங்கங்கள் பணியகத்தின் நிதி நிலைமையும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலும், காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 108,272,097 நிகர சொத்துக்களைக் கொண்டிருந்த பணியகத்துடன் இணைந்த ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்பச் சேவைகள் கம்பனியின் 66 சதவித உரித்தைப் பணியகம் கொண்டிருந்தபோதும், அக்கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

#### 2.2.2 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டைத் தெரிவிக்கையில், நியமத்தின் 82, 83(அ) ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வூதிய வயதெல்லையைக் கடந்த ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணிக்கொடையை நடைமுறைப் பொறுப்பாகவும் எஞ்சிய தொகையை நடைமுறையற்ற பொறுப்பாகவும் நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்க வேண்டுமாயினும், மொத்தப் பணிக்கொடைக்கான நிதியேற்பாடாகிய ரூபா 131,042,056 நடைமுறையற்ற பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது.

- பல்லெகெலே சுனாமி ஊடக நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு வெளி நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகையில் எஞ்சிய ரூபா 7,821,979 நடைமுறையற்ற பொறுப்பாகக் கணக்கிலிடப்படுவதற்கு பதிலாக மொத்த மீதியும் நடைமுறைப் பொறுப்பாக கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ii) உரிமை மூலதன மாற்றக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் வராத ரூபா 25,560,400 பெறுமதியான 2 நிதியங்களும் ரூபா 10,400 பெறுமதியான நன்கொடையும் 118 ஆம் நியமத்தின் கீழ் காட்டப்படலாகாதெனினும் அவை உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(iii) பணியகத்தின் 16 பிரதேச அலுவலகங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் என்பன 82,83(அ) நியமங்களின் பிரகாரம் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டுமாயினும் அவ்வாறு வெளிப்படுத்தப்படவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03**

கட்டிடத் தேய்மான வீதம் 20 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தபோதும், 44 ஆம் நியமத்தின் பிரகாரம் அம்மாற்றம் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை.

**(இ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07**

சொத்தொன்று பயன்படுத்தப்படும் தினத்திலிருந்தே அதற்கான தேய்மானமும் மேற்கொள்ளப்பட வேண்டுமென நியமத்தின் 69 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், ரூபா 525,923,903 பெறுமதியான சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பவற்றுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தின் இறுதித் தினத்திலான பெறுமதியின் அடிப்படையில் தேய்மாளம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கையிருப்பு வழங்கல் கொள்கை கணக்குகளில் தெரியப்படுத்தப்படவில்லை.

(ஆ) நிலையான சொத்தாகக் கணக்கிலிடப்பட வேண்டிய சொத்தொன்றினது அதி குறைந்த பெறுமதி கணக்கீட்டுக் கொள்கை மூலம் தெரியப்படுத்தப்பட வில்லை.

(இ) உள்ளூர் மற்றும் வெளி நாட்டு அரச மூலதன மானியங்களைக் கணக்கிலிடுவதற்குப் பணியகம் கொள்கை ஒன்றை இனங்கண்டு கொண்டிருக்கவில்லை. அத்துடன், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளூர் மானியமாகிய ரூபா 10,399 மற்றும் வெளி நாட்டு மானியமாகிய ரூபா 16,968,107 என்பன நிதி நிலைமைக் கூற்றில் உரிமை மூலதனத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவை நாடுநர்களின் பொருட்டுக் கொள்வனவு செய்யப்பட்டு, அவர்களால் செலவினம் மீளளிக்கப்பட்ட ரூபா 2,046,540 பெறுமதியான சொத்துக்கள் பணியகத்தின் சொத்துகளாகக் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) பணியகத்திற்குச் சொந்தமான ரூபா 199,962,533 பெறுமதியான காணிகள் முன்னைய ஆண்டுகளின்போது சட்டபூர்வமாக ஏனைய அரச நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அவை தொடர்ந்தும் கணக்குகளில் நிலையான சொத்துகளாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) நகர அபிவிருத்தி அதிகார சபையால் பணியகத்திற்குக் கையளிக்கப்பட்ட 129 பர்ச்சஸ் காணி மற்றும் தலைமை அலுவலகம் இயங்கும் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினது கட்டிடம் என்பவற்றைச் சுவீகரித்து அவற்றைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) ஆண்டிற்கான பணிக்கொடைச் செலவினம் ரூபா 13,892,899 ஆகியபோதும், நிதிச் செயலாற்றல் கூற்றில் அதனை ரூபா 13,282,442 எனக் காட்டியமையால் பணிக்கொடைச் செலவினம் ரூபா 610,457 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது காசாக வழங்கப்பட்ட பணிக்கொடை ரூபா 5,447,160 ஆகும். எவ்வாறாயினும், அதனை காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடும்போது, தொழிற்படு மூலதன மாற்றத்தின் கீழ் சீராக்கல் செய்யப்பட வேண்டிய பணிக்கொடை நிதிய வட்டியாகிய ரூபா 646,884 மற்றும் பணிக்கொடையை வழங்கும்போது அறவிடப்பட்ட ரூபா 2,570,304 இடர்க் கடன் என்பவற்றைச் சீராக்கல் செய்து பணிக்கொடைக் கொடுப்பனவாக ரூபா 7,370,580 காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டில் ஊக்குவிப்புப் படிக்கான நிதியேற்பாடு ரூபா 1,161,325 குறைவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனை நிறுத்தி வைத்த சம்பாதியத்தில் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டினது இலாபத்தில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(எ) முதலீட்டு வருமானத்தில் நிறுத்தி வைத்த தொகை ரூபா 6,156,849 ஆகும். இதனைக் கணக்கில் காட்டாமையால் வருமானமும் சொத்தும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) பணியகத்தின் மீளாய்வாண்டிற்கான வருமான வரி ரூபா 33,514,439 ஆகும். எவ்வாறாயினும், நிறுத்தி வைத்தல் வரி ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் நிதிச் செயலாற்றல் கூற்றில் செலுத்த வேண்டிய வரியாகக் காட்டப்பட்டிருந்த தொகை ரூபா 27,315,639 ஆகும்.

(ஐ) மீளாய்வாண்டின்போது பகுப்பாய்வு ஆய்வு கூடத்தில் ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த 52 போத்தல் அமிலமும் 171 பல்வேறு இரசாயனப் பொருட்களும் கணிப்பிடப்பட்டு இறுதிக் கையிருப்பாகக் காட்டப்படவில்லை.

(ஒ) ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்பச் சேவைகள் கம்பனி பணியகத்தின் பொருட்டு 2011 முதல் 2016 வரை செலவழித்த பதவியணி, அலுவலகப் பழுதுபார்ப்பு, செயற்திட்டச் செலவினம் ஆகிய முறையே ரூபா 9,499,181 ,ரூபா 1,450,874, ரூபா 1,618,283 என்பன கணக்கிலிடப்படவில்லை.

(ஓ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான வர்த்தக மற்றும் ஏனைய கடன்பட்டோர் தொகை ரூபா 157,752,554 ஆகும். இதில் ரூபா 1,671,390 ஐந்து ஆண்டுகளைக் கடந்திருந்தபோதும் அதன் பொருட்டு நட்டக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களுடன் நேரடிச் சரி, பிழை பார்த்தல் அறிக்கையை ஒப்பிடுகையில் ரூபா 668,527 பெறுமதியான புத்தகங்களதும் வரை படங்களதும் கையிருப்பு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

வெளிநாட்டு மானியங்களின் மூலம் பெறப்பட்டு 23 ஆண்டுகளாக நிலவி வரும் ரூபா 1,984,210 பெறுமதியான சொத்துக்களை உறுதி செய்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 ஆம் ஆண்டில் பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 973,143 குறித்த ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்படாமை காரணமாக அது பெற வேண்டிய மீதியாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பணியகத்தின் முன்னாள் தலைவர் ஒருவருக்கு பொது மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்கென 2014 ஆம் ஆண்டின்போது வழங்கப்பட்ட ரூபா 1,500,000 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாது அது பெற வேண்டிய மீதியாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்கி நடவாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனியவளப் பொருட்கள் அதிகாரச் சட்டத்தின் 26(1) மற்றும் 44(ஆ) பிரிவுகள் | அரசாங்கத்தின் பொருட்டுப் பணியகம் அறவிடும் அரசிறை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டுமாயினும், 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட முறையே ரூபா 428,601,622 , ரூபா 438,810,229 ரூபா 568,348,602 என்பன திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 9(2)(ஊ) பிரிவு | மீளாய்வாண்டின்போது திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 1,010,235,812 செலவினமாகக் கணக்கிலிடப்படாது உரிமை மூலதனக் குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. |
| II ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு திறைசேரி உண்டியல்களிலும் நிலையான வைப்புகளிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 250,271,935 மற்றும் ரூபா 1,362,072,135 என்பவற்றிற்குரிய அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| (இ) 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பகுதியினது 6(2)(அ) பந்தி | பணிக்கொடையைக் கணிப்பிடுகையில் அரை மாதச் சம்பளத்திற்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு மாதத்திற்கான சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டதால் 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,580,276 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | |
| | (i) XXIV அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 2008 டிசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | இடர்க்கடனை வழங்குகையில் மொத்தச் சம்பளத்தின் அடிப்படையிலும் ரூபா 250,000 எனும் அதியுயர் வரம்பிற்கு அதிகமாகவும் 133 உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதால் ரூபா 31,991,022 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) XXX அத்தியாயத்தின் 1.4 மற்றும் 1.4.1 ஆம் பிரிவுகள் | செயலாளர் ஒருவரது அதிகாரமின்றி 3 உத்தியோகத்தர்கள் பணியகத்துடன் இணைந்த நிறுவனம் ஒன்றிற்குத் தொழில்சார் சேவைகளை வழங்கி முன்னைய ஆண்டில் ஈட்டியிருந்த தொகை ரூபா 1,969,500 ஆகும். தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பணியகம் அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | (i) நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட 26 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 371(5) | மீளாய்வாண்டு முடிவில் தீர்த்து வைக்கப்படாதிருந்த உப கட்டு நிதித் தொகை ரூபா 1,382,800 ஆகும். இதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது காசு மற்றும் காசுக்கு நிகரான சொத்தாக கணக்கிலிடப்பட்டிருந்தது. |
| | (iii) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த ரூபா 654,830 பெறுமதியான 3 காசோலைகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| | (iv) நிதிப்பிரமாணம் 757 | தலைமை அலுவலகம், பிரதேச அலுவலகங்கள், ஆய்வுகூடங்கள் என்பவற்றினது சொத்துக்கள் சரி, பிழை பார்க்கப்பட்டு அவ்வறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.3.1 ஆம் பிரிவு | 2016 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கைகள் உள்ளடக்கப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், பணியகத்தின் மீளாய்வாண்டிற்கான நிதிப்பெறுபேறு ரூபா 1,564,027,187 இலாபமாகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,037,093,870 ஆதலால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 526,933,317 அதிகரிப்பு தென்படுகின்றது. பணியகத்தின் பிரதேச அலுவலகங்களது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 30,679,940

அதிகரித்தும் ஊக்குவிப்புப் படிக்கான நிதியேற்பாடு ரூபா 30,000,000 அதிகரித்துமிருந்தபோதும், அரசிறை வருமானம் ரூபா 285,151,382 அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 144,795,562 ,பரிசோதனைக் கட்டணம் ரூபா 65,010,116 ,நிதிசார் வருமானம் ரூபா 47,378,282 ,ஏனைய வருமானம் ரூபா 22,790,816 என அதிகரிப்புள்ளாகியமை இவ்வதிகரிப்பிற்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப்பெறுபேற்று அமைப்பைப் பகுப்பாய்வு செய்யின், 2012 ஆம் ஆண்டிற்கு இணையாக 2013 ஆம் ஆண்டில் இலாபத்தில் குறைவு தென்பட்டபோதும் 2013 முதல் 2016 வரை தொடர் இலாப அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. ஊழியர்களது ஊதியம், அரசாங்க வரி, நடைமுறையற்ற சொத்துக்களுக்கான தேய்மானம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டதையடுத்து பணியகத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் ரூபா 907,668,917 ஆகியதுடன், 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 2,081,082,775 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியுமிருந்தது.

### 3.2 பணியகத்திற்கு எதிராக அல்லது பணியகத்தால் ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ நிகழ்வுகள்

பணியகத்துக்கெதிராக வெளி நபர்களால் 17 வழக்குகளும் பணியகத்தால் வெளி நபர்களுக்கு எதிராக 07 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் புவிச்சரிதவியல் வரை படங்களைத் தயாரித்தல், கனிப்பொருள் வளங்களை இனங்காணல், ஆராய்ச்சிகளும் அகழ்வுகளும், அவற்றை விற்பனை செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் என்பன பணியகத்தின் பிரதான நோக்கங்களாகும். நோக்கங்களை நிறைவேற்றுவதில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் பணிகளுள் புவிச்சரிதவியல் வரை படங்களைத் தயாரித்தல், கனிப்பொருள் வளங்களை இனங்காணல் மற்றும் அவற்றை மதிப்பிடுவதிலான முன்னேற்றம் மந்த கெதியில் இருந்ததுடன், சுரங்க அகழ்வுகளது வணிக ரீதியான சாத்தியக்கூறு தொடர்பான மதிப்பாய்வுடன் கனிப்பொருள் தயாரிப்பு, வணிக ரீதியாகக் கனிப்பொருட்களை வகைப்படுத்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் ஏற்றுமதிக்கென உபயோகிக்கப்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல் போன்ற பணிகள் எதுவுமே நடைபெறவில்லை.

(ஆ) பணியகத்தின் புவிச்சரிதவியல் பிரிவினது செயலாற்றல் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 ஆம் ஆண்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புவிச்சரிதவியல் பிரிவால் நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட 12 பணிகளுக்கு ரூபா 58,539,100 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த பணிகளது வருடாந்த / தவணை ரீதியான செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்படாததாலும் ஒவ்வொரு பணிக்கும் தேவையான ஆவணங்கள் பேணப்படாமையாலும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின்படி செயலாற்றல் மற்றும் வரைவு ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட செயல்முன்னேற்றம் என்பவற்றைப் பரிசீலிக்க முடியவில்லை.

(ii) ஆண்டிற்கான கனிப்பொருள் கைநூல் - 2015 வெளியிடப்படுவது 2017 யூலை 31 வரை சாத்தியமற்றதாகியிருந்ததுடன், நூலகத்திற்கும் நூதன சாலைக்குமென ரூபா 6.8 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், குறித்த பிரிவுகளில் மீளாய்வாண்டிலும் போதியளவு உருப்படியான மற்றும் நிதிச் செயலாற்றல் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்புத் துறைமுக நகர் நிர்மாண வேலைகளுக்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட 3,909,669 கியூப் கடல் மணலின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய அரசிறை ரூபா 465,546,966 ஆகும். இது அறவிடப்படவில்லை.

(ஆ) தெற்கு அதிவேக வீதியை நீடிப்பதற்கான செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் 4 ஆகும். இவற்றின் நிபந்தனைகளை மீறியவாறு மண் வெட்டி எடுக்கப்பட்டதால் அறவிடப்பட வேண்டிய அரசிறையாகிய ரூபா 3,001,788 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அகழ்வு நடவடிக்கைகளின்போது முறையான கண்காணிப்பும் அனுமதிப்பத்திர நீடிப்பின்போது முறையான பகுப்பாய்வும் பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், ஒரு அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தவர் நிபந்தனைகளை மீறியிருந்தபோதும் கனிப்பொருள் அதிகாரச்சட்டத்தின் 36(அ) பிரிவுக்கு முரணாக அவரது அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வேலை வழங்குபவர் மற்றும் ஊழியர் ஆகியோரது பங்களிப்பு 3:2 எனும் விகிதத்தில் அமையவேண்டியபோதும், பணியகத்தின் வேலை வழங்குபவரது பங்களிப்பு 12 சதவீதமாகவும் ஊழியரது பங்களிப்பு 10 சதவீதமாகவும் அமைந்ததால் வேலை வழங்குபவரது பங்களிப்பு 3 சதவீதம் குறைந்திருந்தது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கான ஊழியர்களது பங்களிப்பு தொடர்பாக எதுவித தகவல்களும் கணக்கீட்டுக் குறிப்புகளில் தெரியப்படுத்தப்படவில்லை.

(ஈ) பணியகத்தின் நோக்கங்களுக்கு முரணாக மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் தொடர்புடைய 4 பணிகளுக்கு பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் பல்வேறு நிறுவனங்களுக்கும் ரூபா 6,000,000 வழங்கப்பட்டிருந்தது. இவற்றுடன் தொடர்புடைய கோவைகளும் செலவினத்தை உறுதி செய்வதற்கான ஆவணங்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(உ) சட்ட விரோத அகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சுற்றி வளைப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்படாததால் தீவடங்கிலும் சட்டவிரோத அகழ்வுகள் நடைபெற்றபோதும், சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ அல்லது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட அளவுக்கதிகமாக அகழ்வுகள் மேற்கொள்ளப்படும்போது அதற்குரிய அரசிறையை அறவிடுவதற்குப் பொருத்தமான விதிமுறைகைளத் தயாரிப்பதற்கோ பணியகம் தவறியிருந்தது.

(ஊ) உத்தியோகத்தர்களைக் களப் பரிசோதனையில் ஈடுபடுத்தும்போது அனுராதபுரம், வவுனியா, மன்னார் ஆகிய 03 மாவட்டங்களிலும் உள்ள 32 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய களப் பரிசோதனைகளுக்கு 2 உதவியாளர்கள் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(எ) அரசாங்கத்தின் மீள இயந்திரமயப்படுத்தல் கொள்கையை அமுலாக்கும் பணிக்கென 2012 ஆண்டின்போது முறைமைகளை ஆய்வு செய்வதற்கென தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 1,505,000 வழங்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு வரை அக்கொள்கை அமுலாக்கப்படவில்லை.

(ஏ) 2011 முதல் 2016 வரை வழங்கப்பட்டிருந்த கனிப்பொருள் மணல் ஆராய்ச்சி அனுமதிப்பத்திரங்கள் 42 ஆகும். இவற்றினது ஆராய்ச்சிப் பெறுபேறுகளின் அடிப்படையில் அகழ்வுகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2012 நவெம்பர் 14 ஆந் திகதிய 12/1383/527/0121 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கனிய மணல் அகழ்வினால் ஏற்படும் சுற்றாடல் மற்றும் சமூகத் தாக்கங்களைக் குறைக்கும் விதத்தில் சட்டதிட்டங்களுக்கமைய அதனை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முன்மொழிதல்களைக் கோரும் ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமாயினும், 4 ஆண்டுகள் கடந்தும் அவ்வாறானதொரு ஆவணம் தயாரிக்கப்படவில்லை. அந்த அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கனிய மணல் அகழ்வு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மேற்கொள்ளும் பெறுமதிக் கணிப்பு முறையாக நடைபெறுகின்றதா எனத் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும் அதன் பொருட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஒ) அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போது அதற்கான பரிந்துரையைப் பெறுவதற்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களுடன் அனுமதிப் பத்திரங்களது மொத்தக் கட்டணமும் அதற்குரிய பெறுமதி சேர் வரி மற்றும் முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட்டிருந்தன. இவற்றிற்குப் புறம்பாக, அனுமதிப் பத்திரத்தின் மூலம் அகழ்வினை மேற்கொள்ளும் கனிப்பொருளின் அளவினது அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய அரசிறைக்கு முற்பணம் பெறப்பட்டுமிருந்தது. இதன் காரணமாக, அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட முடியாத விண்ணப்பப் படிவங்களுக்கான பெருந்தொகை நிரந்தரமாகவே பணியகத்தில் திரண்டவாறிருப்பதுடன், மீளாய்வாண்டின் முடிவில் உள்ளவாறு அவற்றினது கூட்டுத்தொகை ரூபா 170,361,042 ஆகவுமிருந்தது.

**(ஓ) மோசடியான ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான தவறான நடவடிக்கைகள்**

---

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது II ஆந் தொகுதியினது XLVIII அத்தியாயத்தின் பிரகாரம் மோசடியான ஆவணங்களைத் தயாரித்தமை தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கைப் பிரகாரம், 6 உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு இருந்தனர். எனினும் மூவருக்கு மாத்திரமே குற்றப் பத்திரிகை வழங்கப்பட்டிருந்தது.

(ii) ஆரம்ப விசாரணை அறிக்கையில் 2 உத்தியோகத்தர்களை வேலையிலிருந்து இடை நிறுத்துமாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் வேலை இடமாற்றம் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு ஒரு உத்தியோகத்தர் வெளிநாட்டுச் செயலமர்வு ஒன்றில் கலந்து கொண்டமைக்கு ரூபா 130,118 செலவிடப்பட்டுமிருந்தது.

(ii) இது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியபோதும் அவ்வாறு செய்யப்படவில்லை.

(ஔ) அகழ்வுகளின் பின்னர் சுற்றாடலைப் புனரமைப்பதற்கு அனுமதிப்பத்திரதாரர்கள் நடவடிக்கை எடுக்காமையால், 2009 ஆம் ஆண்டு முதல் வங்கிப் பிணை முறியாகிய ரூபா 52,014,000 பணியகத்தால் சுவீகரிக்கப்பட்டிருந்தபோதும், நிபந்தனைகளை மீறிய அனுமதிப்பத்திர உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவோ அவர்களைத் தவறிழைத்தோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவோ முயலாததுடன் குறித்த புனரமைப்பு மேற்கொள்ளப்படாமையால் விளைந்த சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்துப் பணியகம் கவனம் செலுத்தவில்லை.

**(க) உமாஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான அகழ்விற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்**

---

உமாஓயா பலநோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் புஹுல்பொல அகழி மற்றும் புஹுல்பொல நீர்த்தேக்கத்தை டயிரகா நீர்த்தேக்கத்தின் 3,870 மீட்டர் நீளத்துடன் இணைத்து சுரங்கம் அமைக்கும் குறித்த அகழ்வின்போது அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்களிலும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களிலும் குறிப்பிடப்பட்ட வெடிப்புகள் தொடர்பான வரம்பு மீறப்பட்டமையும் அவை தொடர்பான அவதானிப்புகளும் வருமாறு.

(i) தொடர்பு படுத்தும் சுரங்க நிர்மாண வேலைகளுக்கு 2015 டிசெம்பர் முதல் 2016 நவெம்பர் வரையான காலப்பகுதியின்போது ஏற்படுத்தப்பட்ட 2034 வெடிப்புகளில் 269 வெடிப்புகளின் அதிர்வு குறித்த பூமியதிர்வு எல்லையாகிய 5mm/see எல்லை, 19.6 m.m/see வரை அதிகரித்திருந்தது.

(ii) புஹுல்பொல அகழியை நிர்மாணிப்பதற்கு 2015 டிசெம்பர் முதல் 2016 நவெம்பர் வரையான காலப்பகுதியின்போது ஏற்படுத்தப்பட்ட 1607 வெடிப்புகளில் 170 வெடிப்புகளின் அதிர்வு குறித்த காற்றமுத்த வெடிப்பு எல்லையாகிய 120 db எல்லையை அதிகரித்திருந்தது.

(iii) இவ்வெல்லை அதிகரிப்பை கண்காணிப்பு மேற்கொள்ளும் கம்பனி பணியகத்திற்குப் பிரதிகளுடன் ஒப்பந்தகாரருக்கு அறிவித்தபோதும், ஒப்பந்தகாரர் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவில்லை. அந்நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கிய பணியகமும் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது 2016 மார்ச் 24 முதல் தொடர்பு படுத்தும் சுரங்கத்திற்கான அகழ்வு அனுமதிப் பத்திரத்தை நீடித்திருந்தது.

(iv) எல்லை மீறியவாறு வெடிப்புகள் மேற்கொள்ளப்பட்டதை அறிந்திருந்தும் 2015 ஒக்டோபர் 02 ஆந் திகதி தொடக்கம் ஓராண்டிற்குத் தொடர்பு படுத்தும் சுரங்கத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட வெடிப்புக்கான அளவுகோள்களை பணியகம் குறித்த ஆண்டில் இருமுறை அதிகரித்திருந்தது. விபரம் பின்வருமாறு.

| | குறிப்பிடப்பட்ட அளவுகோல் | அளவுகோல் அதிகரிப்பு 2015 டிசெம்பர் 04 | 2016 மே 13 |
|---|---|---|---|
| அதிகூடிய துளையிடல் எண்ணிக்கை | 45 | 80 | 75 |
| அதிகூடிய துளையின் ஆழம் | 2.2m | 3m | 3m |
| ஒரு வெடிப்பக்குப் பயன்படுத்த வேண்டிய பொருட்களின் அளவு | | | |
| Emulsion | 91Kg | 140Kg | 149.2Kg |
| ANFO | 12.7Kg | 40Kg | 48.4Kg |
| Nonnee Detonator | 75 | 80 | 75 |
| Electric Detonator | 06 | 10 | 08 |
| Detonator Code | 3m | 3m | 10m |

செயற்திட்டத்தின் டயிரகா அகழி மற்றும் 15,650 மீட்டர் நீளமான பிரதான சுரங்கத்தை நிர்மாணிக்கும்போது அனுமதிப்பத்திரத்தைப் பெறாது ஒப்பந்தகாரர் அகழ்வினை மேற்கொண்டிருந்தபோதும், பணியகம் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

(ங) ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவு

மீளாய்வாண்டின்போதிலான ரூபா 71,161,325 ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவு தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1996 ஆகஸ்ட் 02 ஆந் திகதியன்று செயலாற்றலின் அடிப்படையில் ஊக்குவிப்புப் படியை வழங்குவதற்கான அங்கீகாரத்தைத் திறைசேரியின் பிரதிப் பணிப்பாளர் வழங்கியிருந்தார். அவ்வாறிருக்க, அவ்வாறானதொரு ஊக்குவிப்புப் படித் திட்டத்தைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) ஊக்குவிப்புப் படிக்குக் கருத்திற் கொள்ளப்பட முடியாத நிகர சம்பாத்தியமான ரூபா 144,326,648 ஊக்குவிப்புப் படிக் கணிப்பிற்கான அடிப்படையாகக் கருதப்பட்டிருந்தது.

(iii) ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவிற்கு பணியகத்தின் நான்கு நிர்ணயங்கள் புள்ளி வழங்கப்படுவதற்குப் பயன்படுத்தப்பட்டபோதும், அவற்றை அடிப்படையாகக் கருதாமையால் செயலாற்றலின் அளவைக் கருத்திற் கொள்ளாது சகல ஊழியர்களுக்கும் 10 மாத ஊக்குவிப்புப் படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) சகல ஊழியர்களுக்கும் பொறுப்பை ஒப்படைக்கும் விதத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. அவ்வாறிருக்க, செயலாற்றல் மதிப்பாய்விற்கான புள்ளிகளில் 45 சதவீதம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமான செயலாற்றலுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், ஊழியர்களது வருகையும் லீவும் ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவின்போது கருத்திற் கொள்ளப்படாமையும் சர்ச்சைக்குரிய விடயங்களாகும்.

(v) ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவிற்கெனத் தகுதிபெற்ற தொகையில் 05 சதவீதமான ரூபா 3,823,563 திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றிராத அவசரகால இடர் நிதியம் எனப்படும் நலன்புரி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(vi) ஊக்குவிப்புப் படிக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் நிகர சம்பாத்தியத்தைத் தீர்மானிக்கையில் வருமானத்தின் மேந்தலைச் செலவினத்தில் 15 சதவீதம் கழித்துக் கொள்ளப்பட்டிருந்தபோதும், அச் சதவீதம் எதனடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது என்பதைக் கணக்காய்வுக்குத் தெரியப்படுத்தவில்லை.

(ச) தாமதன்றி நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாததுடன் மீளாய்வாண்டின் 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2017 செப்டம்பர் 30 ஆந் திகதியளவிலும் பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கனியவள மணல் ஆராய்ச்சியும் அகழ்வுகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும்

(i) 2010 ஆம் ஆண்டில் வாகரைப் பிரதேசத்தில் கனியவள மணல் அகழ்வுக்கு அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பித்த தனியார் கம்பனிக்கு அது வழங்கப்படாது ஆராய்ச்சிக்கான அனுமதிப் பத்திரங்கள் இரு தடவைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. அக்கம்பனி சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதால் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் பேரில் சுரங்க மற்றும் கனிப் பொருள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக 2014 டிசெம்பர் 09 முதல் 10 ஆண்டு காலத்திற்கு 06 ஹெக்டயார் மற்றும் 19 ஹெக்டயார் நிலப் பரப்பில் கனிய மணல் அகழ்விற்கான 02 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 2012 நவெம்பர் 14 ஆந் திகதிய 12/1383/527/0121 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உள்ளூரில் பெறுமதி சேர் உற்பத்தியாக்கங்களை உருவாக்க விரும்பும் முதலீட்டாளர்களுக்கு மாத்திரம் ஆராய்ச்சி மற்றும் அகழ்வுகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கலாம் எனும் விதியைக் கருத்திற் கொள்ளாது இவ்வனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதே நிலைமையில் இருந்த அரச சார்புடைய கம்பனி ஒன்று கோகிலாய் பிரதேசத்தில் மணல் அகழ்வுக்காக 2015 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரம் கோரியபோது அமைச்சரவைத் தீர்மானம் கருத்திற் கொள்ளப்பட்டு அவ்வாறு வழங்கப்படாது, ஆராய்ச்சிக்கான அனுமதிப் பத்திர நீடிப்பு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(iii) அகழ்விற்கான அனுமதிப் பத்திரம் ஓராண்டிற்கென வழங்கப்பட்டு வருடாந்தம் அங்கீகாரமும் பெறப்படுவதையடுத்து வருடாந்தம் அனுமதிப் பத்திரங்கள் நீடிக்கப்பட வேண்டுமாயினும், குறித்த அனுமதிப் பத்திரம் 10 ஆண்டு காலத்திற்கு வழங்கப்படுவதன் காரணமாக முறையான விதிமுறைகளைக் கடைப்பிடிக்க முடியாதிருந்தது.

(iv) இந்த 2 அனுமதிப் பத்திரங்களுக்குமான நடவடிக்கைகளில் 2014 முதல் 2017 யூன் வரை அகழ்வுகளைக் கம்பனி மேற்கொள்ளாதபோதும், 1993 நவெம்பர் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கோ அல்லது ஆராய்ச்சிக்கான அனுமதிப்பத்திரமாக அவற்றை மாற்றுவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(v) குறித்த தனியார் கம்பனி மணலைச் சுத்திகரித்துப் பெறும் உற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருந்ததுடன், ஏற்றுமதிக்கான கனிப்பொருளுக்கு அரசிறை தொடர்பாக கப்பலில் இடும் வரை கட்டணமில்லாது (FOB) தவறான கணிப்பீட்டை மேற்கொண்டதால் அரசிறை குறைவாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம், 8000 மெட்றிக் தொன் காந்த ஈர்ப்பு அற்ற பாரமான செறிவு கூடிய கனிப்பொருளை (Non Magnetic Heavy mineral Concentrate) சீனாவுக்கு ஏற்றுமதி செய்கையில் குறைவாகச் செலுத்தப்பட்டிருந்த அரசிறை ரூபா 3,131,588 ஆகும் என அவதானிக்கப்பட்டது.

(vi) தெவிக்கால் பிரதேசத்தில் மணல் அகழ்விற்காக அரச துறையைச் சார்ந்த கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி அக் கம்பனியின் இணக்கப்பாடின்றி 3 மாதங்களுக்கு அத்தனியார் கம்பனி வர்த்தக அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருந்தது. அவ்வனுமதிப் பத்திரத்தினடிப்படையில் தெவிக்கால் பிரதேசத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட கனியவளங்களாகக் குறிப்பிடப்பட்டு 13,373 மெட்றிக் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தபோதும், அப்பிரதேசத்தில் அது அகழ்ந்ததெடுக்கப்பட்டிராததுடன் அது சம்பந்தமாகப் பரிசீலனைகளை மேற்கொள்ளாது பணியகம் ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கியுமிருந்தது.

(ஆ) சிலிகா மணல் அகழ்விற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புத்தளம் மாவட்டத்தில் உள்ள நாத்தாண்டியா, மாதம்பை, மஹாவெவ பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் சிலிகா மணல் செறிவு தொடர்பாக ஆராய்ச்சி செய்வதற்கும் வரை படங்களைத் தயாரிப்பதற்கும் அவ்வகழ்வுகளது வணிகமய ஆற்றலைப் பகுப்பாய்வு செய்வதற்கும் பணியகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

(ii) எட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்குகையில் அங்கீகரிக்கப்பட்ட அகழ்வுகளின் ஆழம் 10 அடி - 15 அடி வரையாக இருந்தபோதும், ஆராய்ச்சி மேற்கொள்ளப்படாதவிடத்து அகழ்வின் ஆழம் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்பது சர்ச்சைக்குரியதாகவிருந்தது.

(iii) அகழ்வுகள் மேற்கொள்ளப்படும் குழிகளின் ஆழம், சுழற்சி அகழ்வுப் பிரதேசம், காணியின் எல்லையிலிருந்து இருக்க வேண்டிய தூரம், அகழ்வுகளுக்கான குழிகளது தாழிறக்கம் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு அதிகமாகவிருத்தல், நிபந்தனைப் பிரகாரம் அகழ்விற்கான குழிகளைப் புனரமைக்காமை, புனரமைக்காது கைவிடுதல் மற்றும் சுற்றாடல் அதிகார சபையினதும் நீர்வளச் சபையினதும் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை ஆகிய அனுமதிப் பத்திர நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தபோதும், தொடர் நடவடிக்கைகளை அதன் பொருட்டு மேற்கொள்ளாது அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டும் புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டும் பிணைத் தொகை விடுவிக்கப்பட்டுமிருந்தன.

(இ) பணியகத்தைச் சாராத 2 உத்தியோகத்தர்கள் கடந்த ஆண்டில் வெளி நாட்டுப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டபோது சீவனப் படி மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 953,258 பணியகத்தால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், அத்தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

## 4.4 இனங்காணப்பட்ட இழப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஒருவரால் பெறப்பட்ட ரூபா 597,231 பெறுமதியான உபகரணங்கள் அவரால் ஒப்படைக்கப்பட்டிராததுடன், அவ்விழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(ஆ) 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப் பொருட்கள் அதிகாரச் சட்டத்தின் 35 மற்றும் 44 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிடாது துறைமுக நகரத்திற்கான கடல் மணல் அகழ்விற்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட 2014 செப்டம்பர் 16 ஆந் திகதிய IML/A/HO/8328 ஆம் இலக்க அனுமதிப்பத்திரத்திற்குரிய கட்டணமாகிய ரூபா 68,000,000 பெறப்படாமையும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் அகழ்ந்தெடுக்கப்பட்ட 3,485,823 கியூப் கடல் மணலுக்கு அறவிடப்பட வேண்டிய அரசிறையாகிய ரூபா 557,731,680 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்காமையும் காரணமாக பணியகம் ரூபா 625,731,680 இழப்பிற்குள்ளாகியது.

(இ) யான் ஓயா தீர்த்தேக்கச் செயற்திட்டம்

(i) செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சீனக் கம்பனியை உள்ளடக்கிய 41 அனுமதிப் பத்திரதாரர்களுக்கு வழங்கப்பட்ட அகழ்விற்கான அனுமதிப்பத்திரங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த அரசிறை ரூபா 34,215,010 குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ii) யான்ஓயா மணல் குவியல் தொடர்பாக 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச் சட்டத்தின் 12(ஆ) பிரிவின் பிரகாரம் புவிச்சரிதவியல் அகழ்வினை மேற்கொண்டு மணலின் அளவை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) சுரங்க மற்றும் கனிப்பொருள் அதிகாரச் சட்டத்தின் 36(ஆ) பிரிவுக்கு முரணாக 5 அனுமதிப் பத்திரங்களுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 6,100,560 அரசிறையை அறவிடாது அனுமதிப்த்திரக் காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 407 ஆகும். உள்ளவாறான எண்ணிக்கை 318 ஆகும். இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) பணியகத்தின் பதவியணியை மீளமைப்பதற்கு உசாத்துணையாளர் ஒருவரது சேவை 2009 முதல் பெறப்பட்டிருந்தது. பதவியணி அங்கீகரிக்கப்பட்டு ஏறக்குறைய 04 ஆண்டுகளாகியும் ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது 12 ஊழியர்கள் நிரந்தர சேவையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ii) பணியகத்தின் பிரதான தொழிற்படு முகாமையாளர் பதவியாகிய பணிப்பாளர் (நிதி) பொது முகாமையாளரின் கீழ் அமைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பணியகத்தின் இணைந்த கம்பனியினூடாக 92 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் 60 ஊழியர்கள் மேலதிகமாக இருந்ததுடன், மாதாந்தம் சம்பளமும் படியுமாக ரூபா 1,939.995 அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(i) ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களது பதவிகளுக்குரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 315 க்கமைய சொத்துக்களுக்குப் பொறுப்பாக உள்ள களஞ்சிய உத்தியோகத்தர் பதவிக்கு அமைச்சரவையின் அங்கீகாரமின்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். நிரந்தர பதவிக்குரிய சம்பளத்திற்கு மேற்பட்ட சம்பளமாகிய ரூபா 53,004 ஒப்பந்த உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டமை சர்ச்சைக்குரியதாக விளங்கியது.

(iii) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளத்தில் 10 சதவீத வரம்புடன் கம்பனிக்கு சம்பளம் மீளளிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் அவ்வாறாக வழங்கப்பட்ட தொகை ரூபா 3,463,359 ஆகவுமிருந்தது. நேரடியாகவே ஊழியர்களை ஆட்சேர்த்திருப்பின் பணியகம் அத்தொகையைச் சேமித்திருக்க வாய்ப்பிருந்தபோதும் அதன் பொருட்டுக் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வெற்றிடங்களுக்கும் அதிகமாக 12 நிரந்தர மற்றும் 92 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருக்கையில், 148 பயிலுநர்களையும் பணியகம் ஆட்சேர்த்து பிரதேச அலுவலகங்களில் அதிகூடிய 20 வரையிலான எண்ணிக்கையுடைய பயிலுநர்களைப் பயன்படுத்தியிருந்தது.

(ஈ) பணியகத்தின் பணிப்பாளர் (நிதி) பதவி 5 மாதங்களுக்கு மேலாக வெற்றிடமாக இருந்தபோதும், அப்பதவிக்கான ஆட்சேர்ப்பிற்கு எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) பணியகத்தில் 8 புவிச் சரிதவியலாளர்களுக்கான வெற்றிடங்கள் இருக்கையில் சேவையில் ஈடுபட்டிருந்த 2 புவிச்சரிதவியலாளர்கள் 2016 ஒக்டோபர் 17 முதல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளமாகிய ரூபா 429,966 மீளளிப்புச் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுமில்லை.

(ஊ) கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளி நாடு சென்ற பணியகத்தின் நால்வர் உடன்படிக்கைப் பிரகாரம் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாது சேவையிலிருந்து விலகியிருந்தனர். உடன்படிக்கை மீறலுக்காக உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தண்டப் பணமும் ஏனைய செலவினமுமான ரூபா 2,459,663 ஐ அறவிடுவதற்குப் பணியகம் மீளாய்வாண்டிலும் தவறியிருந்தது.

## 4.6 முறையாகச் சுவீகரிக்கப்படாத காணிகளில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளும் நிர்மாணிக்கப்பட்டவற்றினது உரித்தும் குத்தகைக் கால முடிவில் குத்தகையை வழங்கியவருக்கு உரித்தாகும் என்பதும் அது தொடர்பாக எக் கொடுப்பனவையும் கோருவதற்கு குத்தகையாளருக்கு உரித்தில்லை எனவும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பணியகம் பெற்றிருந்த வெரல்லவத்த காணியில் ரூபா 46,035,957 செலவில் 2 கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஆ) காணியின் உரித்தைச் சுவீகரிக்காது 2014 ஆம் ஆண்டில் ரூபா 4,040,144 செலவில் அனுராதபுரம் பிரதேச அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன்போது திட்டத்திற்கமைய நிர்மாண வேலை முடிவுறாமையால் இட வசதி பற்றாக்குறையாகவும் கோவைகள் பாதுகாப்பற்று இருப்பதும் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2015 - 2017 காலப்பகுதிக்கெனத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டின்போது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்படும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பங்களிக்கும் சகல பிரிவுகளுக்கும் நிதி மற்றும் உருப்படிச் செயலாற்றல் இலக்கையும் பொறுப்பையும் வழங்கும் விதத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) பணியகத்தின் 11 பிரிவுகள் மற்றும் 14 பிரதேச அலுவலகங்களது கடமைகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கவில்லை.

(இ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்ட செயற்பாடுகளினதும் மொத்த உருப்படி இலக்கு காட்டப்பட்டிராததுடன், செயற்பாடுகளது செயல் முன்னேற்றத்தை பரிசீலிப்பதற்கான விதிமுறைகளும் தயாரிக்கப்படவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 4 நிரந்தர உதவியாளர்களும் கணக்காய்வுப் பதவியணியில் நியமிக்கப்பட்டிராததுடன், உள்ளகக் கணக்காய்வாளர் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான பதவியிலும் அமர்த்தப்பட்டிருந்ததால் உள்ளகக் கணக்காய்வாளரது அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) உள்ளகக் கணக்காய்வாளரின் கணக்காய்வு தொடர்பான தொழில்சார் அறிவைப் பெருக்குவதற்குப் போதுமான நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம் பணியகத்தின் சகல செயற்பாடுகளும் உள்ளடக்கப்படுமாறான முறையான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படாததுடன், புவிச்சரிதவியல் பிரிவின் 03 கூறுகளும் மனிதவளப் பிரிவின் 12 செயற்பாடுகளும் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிராததுடன், அவை கணக்காய்வு செய்யப்படவுமில்லை.

(ஈ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கமைய நிறைவேற்றப்பட வேண்டிய புவிச்சரிதவியல் பிரிவுடன் தொடர்புடைய 12 கணக்காய்வுப் பரிசோதனைப் பணிகள் நிறைவேறவில்லை.

## 5.4 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல்

2014 ஆம் ஆண்டினது ஆண்டறிக்கை 2017 மே மாதமளவிலும் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு செலவுத் திட்டமிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே 11 முதல் 226 சதவீதம் வரையிலானதும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே 12 முதல் 295 சதவீதம் வரையிலானதுமான வேறுபாடுகளும் நிலவியமையால் வரவு செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

மேலும், மதிப்பீடு செய்யப்படாத 4 வருமானத் தோற்றுவாய்களிலிருந்து ரூபா 2.9 மில்லியன் சம்பாதிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,592,292 மீதியைக் கொண்டிருந்த இடர் நிதியம் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக மன்னார் தீவில் வணிக ரீதியாக மணல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்காது விடுவதற்கான நடவடிக்கைகளைப் பணியகம் மேற்கொண்டிருந்தது. எவ்வாறாயினும், வணிக ரீதியற்ற மணல் அகழ்விற்கான அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வுகள் பெருகியமையும் அவ்வாறான அகழ்வுகளை நிறுத்துவதற்கு பணியகம் தலையிடாததும் காரணமாக பணியகம் எதிர்பார்த்தவாறு பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவது இயலாதது ஒன்றானது.

(ஆ) புத்தளம் மாவட்டத்தில் நாத்தாண்டியா பிரதேச செயலகப் பிரிவில் சிலிகா மணல் அகழ்வுகளையடுத்து குழிகள் மூடப்படுகையில் அப்பிரதேசத்தின் நில நீர் மட்டம் மற்றும் நீரினது தன்மை என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நீர்வள சபையால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு முரணான விதத்தில் பணியகம் அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருந்தது.

(இ) அனுமதிப் பத்திர நிபந்தனைகளுக்கு மாறாக கனிப்பொருட்களை அகற்றுவதன் காரணமாக சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளமை தெரியவந்தபோதும், அவ்வாறான அகழ்வுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு பணியகம் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சம் | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | ஏடுகளைப் பேணுதல், கணக்கீட்டு வழுக்கள் என்பன போன்றே கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கொள்கைகள் சம்பந்தமாகக் கவனம் செலுத்தாமை. |
| (ஆ) | களஞ்சியக் கட்டுப்பாடு | ஆய்வுகூடங்களில் கையிருப்புகளைப் பெறுதல், வழங்குதல், குறித்துக் கொள்ளுதல் என்பன முறையாக நடைபெறாமை. |
| (இ) | களப் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் | களப் பரிசோதனைகளின்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளுக்கான அறிவுறுத்தல் வழங்கப்படாமை, நாட் புத்தகங்களைப் பயன்படுத்தாமை, மேற்கொண்ட மாதாந்த வேலைகளையும் எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களையும் சமர்ப்பிக்காமை, களத்தில் நிலவும் குறைபாடுகள் மற்றும் நிபந்தனை மீறல்களைப் பிரதேச அலுவலகங்களுக்கு அறிக்கைகள் மூலம் தெரிவிக்காமை. |
| (ஈ) | மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் | மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கையில் தாமதக் கட்டணம் அறவிடப்படாமை, அனுமதிப்பத்திரம் காலாவதியாகியிருந்த காலத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதைப் பரிசீலிப்பதற்கான விதி முறைகள் இல்லாதிருத்தல், சுற்றாடல் பரிந்துரைகள், பிரதேச செயலாளர்களது பரிந்துரைகள், களப் பரிசோதனை அறிக்கைகள் என்பன பெறப்படாமை. |
| (உ) | பிரதேச செயலகங்களினூடாக வணிக ரீதியற்ற அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | பிரதேச செயலகங்களுக்கு அனுமதிப் பத்திரப் புத்தகங்களை வழங்குதல், அவ்வலுவலகங்கள் வழங்கிய புத்தகங்கள், மாதாந்தப் பொழிப்புகள் என்பவற்றைப் பெறுதல், இணைப் பிரதிகைளைப் பாதுகாப்பாகப் பேணுதல் போன்ற பணிகள் போதியளவு கண்காணிப்புடன் முறையாகவும் விசுவாசமாகவும் நடைபெறாமை. |
| (ஊ) | பதவியணி | பதவியணிக்கான அங்கீகாரத்தைப் பெறுதல், ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்துக் கொள்ளுதல், வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கவனம் மேற்கொள்ளாமை. |